**Series : EFGH/S**

**Set – 4**

| | |
|---|---|
| **Q.P. Code** | **10/S** |

Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

**Roll No.**

# தமிழ்
# TAMIL

*கால அளவு : **3** மணி* | *மொ. மதிப்பெண்கள் : **80***

*Time allowed : **3** hours* | *Maximum Marks : **80***

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **15** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- **வினாத்தாளின் வலது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள கேள்வி பதில் குறியீட்டை, தேர்வர் விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுத வேண்டும்.**
- இந்த வினாத்தாளில் **14** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- **எழுதத் தொடங்குவதற்கு முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.**
- வினாத்தாளைப் படிப்பதற்கு **15** நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **15** printed pages.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **14** questions.
- **Please write down the Serial Number of the question in the answer-book at the given place before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

#

## *General Instructions :*
## பொதுவான வழிமுறைகள் :

1. *The questions paper contains **FIVE** sections.*

   இவ்வினாத்தாள் **ஐந்து** பகுதிகளைக் கொண்டுள்ளது.

2. *It has total **14** questions.*

   இவ் வினாத்தாள் **14** கேள்விகளைக் கொண்டுள்ளது.

3. *Section **A** – contains **2** questions. [Question No. **1** to **2**]*

   பகுதி **அ** – **2** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **1** முதல் **2** வரை ]

4. *Section **B** – contain **4** questions. [Question No. **3** to **6**]*

   பகுதி **ஆ** – **4** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **3** முதல் **6** வரை ]

5. *Section **C** – contain **4** questions. [Question No. **7** to **10**]*

   பகுதி **இ** – **4** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **7** முதல் **10** வரை ]

6. *Section **D** – contain **1** question. [Question No. **11**]*

   பகுதி **ஈ** – **1** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **11**]

7. *Section **E** – contain **3** questions. [Question No. **12** to **14**]*

   பகுதி **உ** – **3** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **12** முதல் **14** வரை ]

8. *Attempt as per specific instructions for each question.*

   வினாக்களின் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தேடுத்து எழுதுக.

9. *Please write down the Serial no. of the question in the answer book before attempting it.*

   பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.

## பகுதி – அ (படித்தல் திறன் – 10 மதிப்பெண்கள்)
### SECTION – A (Unseen Passage – 10 marks)

**1.** பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக : *5×1=5*

ஆற்றொழுக்கு என்னும் சொற்றொடர் வழக்கில் உள்ளது. அதன் பொருள் ஆறு ஒழுகும் முறை அல்லது ஆற்றின் ஒழுக்கம் என்பதாகும். மலையுச்சியில் மழை பெய்து ஆற்றில் புதுநீர் வரும்போது அது கலங்கி இருக்கும். வேகம் உடையதாகவும் இருக்கும். தொடர்ந்து மழை பெய்யுமாயின் ஆற்றில் வெள்ளம் பெருகி வழியிலே கிடப்பவை அனைத்தையும் அடித்துக் கொண்டு வரும். கரைகளைக் கடந்து இரு மருங்கிலும் வாழும் உயிர்களுக்குப் பல்வேறு வகைக் கேடுகளை விளைவிக்கும். ஆனால் மழையின் கடுமை குறைந்த பிறகு வெள்ளம் வடிகிறது. பிறகு இருகரைகளுக்குள் அடங்கி ஓடுகிறது ஆறு. மேடு பள்ளமின்றி, சிறு அலைகளுமின்றி மிகுந்த வேகமும் இன்றித் தனது பயண ஓட்டத்தைத் தொடர்கிறது ஆறு.

**வினாக்கள்** :

(i) ஆற்றொழுக்கு என்பதன் பொருள் யாது ?

- (A) ஆறு ஒழுகும் முறை
- (B) ஆற்று வெள்ளம் பெருகும் முறை
- (C) ஆறு கலங்கும் முறை
- (D) ஆறு வற்றும் முறை

(ii) புத்தம்புது நீரின் வரவால் ஆறு எவ்வாறு காணப்படும் ?

(A) அடங்கி

(B) கலங்கி

(C) தெளிவாக

(D) தெள்ளத்தெளிவாக

(iii) ஆற்று வெள்ளம் பூமியில் வாழும் உயிர்களுக்குச் செய்வது என்ன ?

(A) கேடுகளைத் தடுக்கிறது

(B) நன்மைகளைத் தருகின்றது

(C) கேடுகளைத் தருகின்றது

(D) வளங்களைத் தருகின்றது

(iv) வெள்ளம் வடியும் தருணம் எது ?

(A) மழை அதிகரிக்கும் போது

(B) மழையின் கடுமை குறையும் போது

(C) இருகரைகளைத் தாண்டும் போது

(D) கரைபுரண்டு ஓடும் போது

(v) ஆற்றில் வெள்ளம் பெருகி வரும்போது என்ன செய்யும் ?

(A) நறு மணப் பூக்களைச்சுமந்து வரும்

(B) மரக்கட்டையைச் சுமந்து வரும்

(C) வழியிலே கிடப்பவைகளை அடித்து வரும்

(D) குப்பைகளைச்சேமித்துக் கொண்டு வரும்

2. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக : *5×1=5*

சிந்தனை மிகவும் சக்கிவாய்ந்தது. ஆழ்ந்த சிந்தனைக்கு அதிகம் பயன் உண்டு என்கிறார் ஐன்ஸ்டின். சிந்திக்காதவன் முட்டாள். சிந்திக்கத் தெரிந்தவன் தைரியசாலி. சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன் என்கிறார். ஒரு செயலில் இறங்குவதற்கு முன் அதைச் செய்ய வேண்டுமா ? அல்லது வேண்டாமா ? என்று முடிவெடுப்பதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளலாம் ஆனால் அதில் இறங்கிய பின் காலம் கடத்துவது தான் தவறு. இதைத்தான் வள்ளுவர்

'எண்ணித் துணிகக் கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு'

என்கிறார். வேகத்துடன் விவேகமும் முக்கியம். புதுமைகளை விரும்பிச் செய்யுங்கள்.

எதிர்காலத்தைக் கவனித்து அதன்படி நடப்பது அதிக பலனைத் தரும். நாளை என்ன நடக்கும் என்பதைத் தொலைநோக்குப் பார்வையில் சிந்தித்து அதன்படி நடப்பவர்கள் தான் இன்றைய போட்டிகள் நிறைந்த உலகில் வெற்றிபெறுகிறார்கள். வெற்றிகளை வளைத்துப் போடுவதில் ஒருவருடைய பேச்சு மிகவும் முக்கியப் பங்கை வகிக்கிறது. பேச்சில் திறமை வாய்ந்தவர்கள் எப்படியும் பிழைத்துக்கொள்ள முடியும். உற்சாகமாகப் பேசினால் உலகையே வளைத்துப் போடலாம்.

**வினாக்கள்** :

(i) ஆழ்ந்த சிந்தனைக்கு அதிக பயன் உண்டு என உரைத்தவர் யார் ?

(ii) யார் தைரியசாலி ? யார் பிடிவாதக்காரன் ?

(iii) வள்ளுவரின் சிந்தனைபற்றிய பொன்மொழி யாது ?

(iv) போட்டி நிறைந்த உலகில் யாரால் மட்டும் வெற்றியடைய முடியும் ?

(v) பேச்சுத் திறன் உடையோரின் சிறப்பு யாது ?

## பகுதி – ஆ (இலக்கணப் பகுதி – 12 மதிப்பெண்கள்)
## SECTION – B (Grammar – 12 marks)

**3.** சான்று தருக : (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) *3×1=3*

(i) பெயரெச்சம்

(A) கேட்ட பாடல்

(B) பாடல் கேட்டான்

(C) கேட்க வேண்டிய பாடல்

(D) கேட்டு வந்தான்

(ii) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

(A) கெடு (B) கேடு

(C) சுடு (D) பெறு

(iii) திணை வழாநிலை

(A) மாலதி பறித்துத

(B) பசு புல் மேய்ந்தாள்

(C) மார்டின் எறிந்தான்

(D) மாலதி சிரித்தன

(iv) உறுவது கூறல்விடை

(A) நீ பாடுவாயா ? என்ற வினாவிற்குத்தொண்டை வலிக்கும் எனக்கூறல்

(B) நீ பாடுவாயா ? என்ற வினாவிற்குத்தொண்டை கட்டி உள்ளது எனக்கூறல்

(C) நீ பாடுவாயா ? என்ற வினாவிற்குப் பாடாமல் இருப்பேனா ? என்று கூறல்

(D) நீ பாடுவாயா ? என்ற வினாவிற்கு நீயே பாடுக என்று கூறல்

(v) குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்

(A) திருமால், தோன்றல், ஆயர்

(B) இந்திரன், ஊரன், செங்கழுநீர்

(C) அருவிநீர், காந்தள், தொண்டகம்

(D) பொய்கை, மணமுழா, நெல்லரிகிணை

**4.** கோடிட்ட இடங்களை நிரப்புக :
(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) *3×1=3*

(i) மார்கழி, தை ஆகிய இரண்டும் .................... காலத்துக்குரியன.

(A) முன்பனிக்காலம் (B) பின்பனிக்காலம்

(C) இளவேனிற்காலம் (D) முதுவேனிற்காலம்

(ii) கடைக்குச் செல்வாயா ? என்ற வினாவிற்குச் செல்வேன் என்று கூறும்விடை .................... .

(A) நேர்விடை

(B) இனமொழிவிடை

(C) உற்றது உரைத்தல் விடை

(D) உறுவது கூறல் விடை

(iii) என்னடா விளையாட வேண்டுமா ? எனக்கன்றுக் குட்டியைக் கேட்பது

(A) பால் வழு

(B) திணை வழு

(C) பால் வழுவமைதி

(D) திணை வழுவமைதி

(iv) எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் எனும் நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வருவது .......... .

(A) பண்புத்தொகை

(B) உம்மைத்தொகை

(C) உவமைத்தொகை

(D) அன்மொழித்தொகை

(v) செய்யுளில் ஓசை குறையும் போது நிறைவு செய்ய நெட்டெழுத்துகள் அளபெடுப்பது ............ ஆகும்.

(A) செய்யுளிசை அளபெடை

(B) இன்னிசை அளபெடை

(C) சொல்லிசை அளமெடை

(D) ஒற்றளபெடை

**5.** இலக்கணக் குறிப்புத் தருக : *3×1=3*
(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)

(i) நீ வெல்லம் வாங்கி வா !

(A) தனிமொழி

(B) தொடர்மொழி

(C) பொதுமொழி

(D) வினையாலணையும் பெயர்

(ii) மலைவாழ்வார்

(A) வினைத்தொகை (B) அன்மொழித்தொகை

(C) வேற்றுமைத்தொகை (D) உவமைத்தொகை

(iii) கை காட்டி இறங்குகிறது வண்டி வந்துவிட்டது

(A) வழுநிலை (B) கால வழுவமைதி

(C) வழாநிலை (D) இடவழுவமைதி

(iv) ''உடுத்தவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் தன்னால்
எடுத்ததுவும் பள்ளிக் கியையப் படுத்துவும் அந்நாள்
எறிந்ததுவும் அன்பின் இரந்ததுவும் பொன் ஆவரை
இலை காய்பூ.''

(A) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

(B) நிரல்நிறைப் பொருள் கோள்

(C) கொண்டு கூட்டுப் பொருள் கோள்

(D) எதிர்நிரல் நிறைப் பொ ருள்கோள்

(v) கற்பித்தவர்

(A) தொழிற்பெயர்

(B) முதனிலைத் தொழிற்பெயர்

(C) வினையாலணையும் பெயர்

(D) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

**6.** கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) *3×1=3*

(i) மாணவர்கள் ஆசிரியரை வரவேற்றனர் அடுக்குத் தொடராக மாற்றுக

(A) மாணவர்கள் ஆசிரியரை வருகவே என வரவேற்றனர்

(B) மாணவர்கள் ஆசிரியரை 'வா' என வரவேற்றனர்

(C) ஆசிரியர்கள் மாணவரை வருக வருக என வரவேற்றனர்

(D) மாணவர்கள் ஆசிரியரை வருக வருக என வரவேற்றனர்

(ii) புலவர் வந்தது – வழுவைக் கண்டறிக

(A) பால் வழு

(B) இடவழு

(C) திணைவழு

(D) கால வழு

(iii) ‘விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.’ – பொருள் கோள் எதுவென உரைக்க

(A) கொண்டு கூட்டுப்பொருள்கோள்

(B) முறைநிரல் நிறைப் பொருள் கோள்

(C) ஆற்றுநீர்ப்பொருள்கோள்

(D) எதிர் நிரல் நிறைப் பொருள்கோள்

(iv) எற்பாடு – பொருள் கூறுக

(A) சூரியன் தோன்றும் நேரம்

(B) சூரியன் மறையும் நேரம்

(C) சந்திரன் தோன்றும் நேரம்

(D) சந்திரன் மறையும் நேரம்

(v) ‘திருக்குறள்’ கிடைக்குமா ? எனக் கடைக்காரரிடம் வினவுவது – எவ்வகை வினா ?

(A) அறிவினா

(B) ஐயவினா

(C) கொளல் வினா

(D) கொடை வினா

## பகுதி – இ (இலக்கியம் – 31 மதிப்பெண்கள்)
## SECTION – C (Main Course Book – 31 marks)

**7.** பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. *2×1=2*

(i) குற்றம் ...................... குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

(A) ஈலனாய்க் (B) இலனாய்க்

(C) குற்றமாய் (D) சுற்றமாய்க்

(ii) இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
............ இலானும் கெடும்.

(A) கொடுப்பார் (B) கெடுப்பார்

(C) தொடுப்பார் (D) விடுப்பார்

**8.** பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள்தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக : *5×1=5*

'நும்இல் போல நில்லாது புக்கு
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்'

**வினாக்கள்** :

(i) மலைபடுகடாம் .................. நூல்களுள் ஒன்று.

(A) எட்டுத்தொகை

(B) பத்துப்பாட்டு

(C) பதினெண்கீழ்க்கணக்கு

(D) நீதி

(ii) மலை படுகடாம் நூலின் ஆசிரியர் ..............

(A) கம்பர்

(B) பாரதியார்

(C) பெருங்கௌசிகனார்

(D) வள்ளுவர்

(iii) மலைபடுகடாம் .............. எனவும் அழைக்கப்படுகிறது.

(A) கூத்தராற்றுப்படை (B) ஆற்றுப்படை

(C) தெருக்கூத்து (D) மேடை நாடகம்

(iv) மலைபடுகடாம் ................ என்னும் குறுநில மன்னனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது.

(A) நன்னன் (B) பாரி

(C) காரி (D) ஓரி

(v) அல்கி – இச்சொல்லின் பொருள் .................. .

(A) பள்ளம் (B) சுற்றம்

(C) தங்கி (D) கடும்பு

**9.** பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. *3×3=9*

(i) மனோன்மணீயம் சுந்தரனார் தமிழ்த்தாயை வாழ்த்தும் விதத்தைத் தெளிவுற எழுதுக.

(ii) முல்லை நிலத்து முதற்பொருள் கருப் பொருள் உரிப்பொருள் ஆகியவற்றை விவரித்து எழுதுக.

(iii) சங்க இலக்கியமான பரிபாடலில் அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்தும் கூறும் அறிவியல் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(iv) கற்றோரின் சிறப்பு பற்றி திருவிளையாடற் புராணம் கூறும் செய்திகளை எழுதுக.

(v) கோசல நாட்டின் வளத்தைக் கம்பனின் உத்தி எவ்வாறு காட்சிப்படுத்துகிறது ?

**10.** பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. *3×5=15*

(i) காவடியாட்டம் பற்றிக் விளக்குக.

(ii) 'வளி' தன்னைப் பற்றிக் கூறுவதாக அமைத்து உங்களுடைய கற்பனையில் தலைப்புகள் வழங்கி எழுதுக.

(iii) பெருந்தமிழர் தமிழ்த் திரு. இரா. இளங்குமரனார் பற்றிக் குறிப்பு எழுதுக.

(iv) வாழை இலையில் விருந்து பற்றி விவரி.

(v) மெய்நிகர் உதவியாளர் யார் ?

## பகுதி – ஈ (துணைப்பாடம் – 10 மதிப்பெண்கள்)
## SECTION – D (Non-detail – 10 marks)

**11.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக. *1×10=10*


(i) விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

(ii) புயலிலே ஒரு தோணி

(iii) கோபல்லபுரத்து மக்கள்

## பகுதி – உ (படைப்பாற்றல் – 17 மதிப்பெண்கள்)
## SECTION – E (Creative Writing – 17 marks)

**12.** (அ) கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. *1×3=3*



**For Visually Impaired Candidates**

(ஆ) பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா.

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக. *3*

(i) உப்பிட்டவரை உள்ளவும் நினை

(ii) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக. *1×8=8*

(i) உம்முடைய நடன அரங்கேற்றத்திற்கு அழைப்பு விடுத்து உன் அத்தைக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

**அல்லது (OR)**

(ii) உமது பகுதியில் திருட்டுப் போவதைத் தடுத்து பாதுகாப்பு வசதி செய்துதர வேண்டிக் காவல்துறை ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(இரண்டு கடிதங்களிலும் உம் முகவரி
கவியரசன்/கவியரசி, எண்: 7, கம்பர்தெரு, சென்னை - 600005)

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. *1×6=6*

(i) முன்னுரை – நில ஊர்தி – நீர் ஊர்தி – வானூர்தி – பயன்கள் – முடிவுரை.

(ii) முன்னுரை – முயற்சி இன்றியமையாமை – முயற்சி தந்த வினைகள் செய்தொழிலின் சிறப்பு – முடிவுரை.

(iii) முன்னுரை – கண்காட்சியின் குறிக்கோள் புத்தகக் கண்காட்சியின் அமைவிடம் – பல்துறை நூல்களின் காட்சியகம் – புத்தகக் கண்காட்சியின் பயன்கள் – முடிவுரை.